- Jamal Academic Research Journal An Interdisciplinary Special Issue, Vol – 1 ISSN: 0973 – 0303 SEP – 2016, P.85.
- Journal of Classical Thamizh (Quarterly International Multilateral Tamizh Journal) Vol – 4, No:1 Jan-Mar – 2016, ISSN: 2321 – 0737, P.10 , www.rajapublication.com
- Ayldha Ezhuthu An International Journal of Tamil Studies> ISSN: 2278 – 7550 (UGC RECOGNISED JOURNAL), March: 2018, P. 133. www.pallavi pathippakam.in
- Journal of Modern Thamizh Research, Vol. No:1, ISSN: 231-984x – Jan – March – 2018, p. No241. , www.rajapublication.com


*****************

# சாதாரண பாடசாலைகளில் விசேட தேவையுடைய மாணவர் கற்றலில் எதிர்கொள்ளும் சவால்களும், கற்றல் வாய்ப்புக்களும்

# Learning Challenges and Learning Opportunities Facing Special Learning Students in Ordinary Schools

சி. அருள்நேசன் | S. Arulnesan
கல்வி, பிள்ளைநலத்துறை, கலை, கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
arulnesan1994@gmail.com

## ஆய்வு சுருக்கம்

இன்றைய உலகமயமாதல் யுகத்தில் உலகியல் மாற்றங்களுக்கேற்ப ஆளுமை மிக்க மனித சமூகத்தை உருவாக்கும் பொறுப்பு கல்வித்துறைக்கு உண்டு. வகுப்பறையில் பல்வகைத் தன்மை கொண்ட விசேட தேவையுடைய மாணவர்கள் காணப்படலாம். பெரும் விசேட தேவைகள் சார் மாணவர்கள் தொடர்பாக அதிகம் கவனம் செலுத்தப்படுவதில்லை. எனவே அவர்களது பிரச்சினைகளைக் களைந்து சீரான கற்றலுக்கு வாய்ப்பளிப்பது பாடசாலையின் கடமையாகும். அந்த வகையில் "சாதாரண பாடசாலைகளில் விசேட தேவைகள் சார் மாணவர்கள் கற்றலில் எதிர்கொள்ளும் சாவல்கள், கற்றல் வாய்ப்புக்கள் எனும் தலைப்பின்கீழ் இதனைக் கண்டறிந்து அவற்றை மேம்படுத்துவதற்கான தீர்வாலோசனைகளையும் விதந்துரைப்புக்களையும் முன்வைப்பதே இவ்வாய்வின் நோக்கமாக அமைகின்றது. இவ்வாய்வானது அளவை நிலை ஆய்வாக வடிவமைக்கப்பட்டு முன்னெடுக்கப்பட்டது. பலாங்கொடை கல்வி வலயத்தின் இம்புல்பே கோட்டத்தின் ஐந்து பெருந்தோட்டப்புறத் தமிழ் பாடசாலைகளில் தரம் 6 – 9 வரையான வகுப்புக்களிலிருந்து நோக்க மாதிரி அடிப்படையில் 100 விசேடதேவைசார் மாணவர்கள் இவ்வாய்வுக்காக தெரிவு செய்யப்பட்டனர். மேலும் 50 பெற்றோர்களும், 50 கனிஸ்ட இடைநிலை பிரிவு ஆசிரியர்களும், எளிய எழுமாற்று அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டனர். அதிபர்களும் எளிய எழுமாற்று மாதிரியில் உள்வாங்கப்பட்டிருந்தனர். வினாக்கொத்து, நேர்காணல், அவதானிப்பு போன்ற தரவு சேகரிப்புக் கருவிகளைப் பயன்படுத்தித் தொகைசார் மற்றும் பண்புசார் தரவுகள் திரட்டப்பட்டன. பெறப்பட்ட தரவுகள் நூற்றுவீதம் மூலம் குறித்துக் காட்டப்பட்டுள்ளன. இவ்வாய்வின் மூலம் பெறப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் பாடசாலையில் விசேட தேவைகள்சார் மாணவர்கள் கற்றலில் சவால்களை

எதிர்கொள்கின்றனர். அவர்களுக்கான கற்றல் வாய்ப்புக்களும் குறைவாகவே காணப்படுகின்றமையைக் கண்டறிய முடிந்தது. இதற்குப் பாடசாலையின் வளப்பற்றாக்குறை, பெற்றோர்களின் கவனமின்மை, பாடசாலை செயற்பாடுகளின் திருப்தியின்மை முக்கிய காரணங்களாக அமைகின்றன. எனவே பல்வேறுபட்ட கற்றல் வாய்ப்புக்களைப் பாடசாலை மட்டத்தில் ஒழுங்கமைப்பதோடு அவற்றிற்குப் பெற்றோரின் பங்களிப்பையும் பெற்றுக்கொடுப்பதால் மாணவர்களிடையே சிறந்த கற்றல் விருத்தியை ஏற்படுத்த முடியும் என்பது கண்டறியப்பட்டது. அத்துடன் கற்றலில் நலிவு நிலையைக் காட்டும் மாணவர்களுக்கான கற்றலின்பால் உள்ள ஈடுபாட்டை அதிகரிக்கவும், கற்றலை ஊக்குவிக்கும் வகையிலான உத்திகள் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.

## Abstract

In globalization, the education sector has a responsibility to create a humane society that is responsive to global changes. Students with special needs can be found in a variety of classrooms. Greater special needs students are not given much attention. It is therefore the duty of the school to eliminate their problems and provide an opportunity for balanced learning. In that regard, the purpose of this study is to identify the challenges faced by students with special needs in learning in ordinary schools and to present solutions and suggestions for improving them. This study is designed and carried out as a scale level study.

This study has been conducted focusing on the plantation Tamil schools in the Impulpe division of the Balangoda education zone. For this purpose, 5 Tamil schools have been identified on the basis of the facility model and since then 100 special needs students and 50 parents of those students have been identified on the basis of the objective model from classes 6 to 9 of junior intermediate section. The 50 junior intermediate teachers and 5 principals of the schools were identified as models on the basis of light transformation and all the data obtained from them qualitatively and quantitatively were analyzed through Excel and marked with tables and diagrams. Based on the results obtained from this survey, students with special needs in school face learning challenges. Learning opportunities for them were also found to be low. The main reasons for this are the lack of resources in the school, the inattention of the parents and the dissatisfaction of the school activities. It was therefore found that organizing the various learning opportunities at the school level and involving the participation of parents in them can lead to better learning development among the students. There are also suggestions on how to increase learning engagement and encourage learning for students with learning disabilities.

**திறவுச் சொற்கள் (Keywords):** சாதாரண பாடசாலைகள், விசேட தேவையுடைய மாணவர்கள், கற்றல் சார்ந்த சவால்கள், கற்றல் வாய்ப்புக்கள், இடைநிலை மாணவர்கள் (Normal Schools, Special needs Students, Learning challenges, Learning opportunities, Intermediate students)

## 1.1 ஆய்வு அறிமுகம்

இன்றைய 21ஆம் நூற்றாண்டிலே சமூகம் பல்வேறு வகையிலும் முன்னேறியுள்ளது. அந்த வகையில் அனைவருக்கும் கல்வி எனும் சிந்தனை மனித சமூகத்தின் சமூக தேவைகள்

மற்றும் எதிர்பார்ப்புக்களைப் பூர்த்தி செய்ய மிகவும் அவசியமான ஒன்றாகக் காணப்படுகின்றது. அனைவருக்கும் கல்வி எனும் சிந்தனையானது பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும் கல்வி பெற தகுதியுடையவர்களே என்பதைச் சுட்டி நிற்கின்றது. விசேட தேவையுடைய மாணவர்கள் இன்று அதிகம் அனேகமான பாடசாலைகளில் சாதாரண மாணவர்களுடன் இணைந்து வகுப்பறைச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தப்படுகிறார்கள். இவ்வாறு ஈடுபடுத்துவதனூடாகப் பல்வேறு பின்னடைவுகள் விசேட தேவையுடைய மாணவர்கள் மத்தியில் ஏற்படுகின்றன. ஒவ்வொரு வகுப்பறைச் செயற்பாட்டின் நோக்கமும் அங்குக் காணப்படும் மாணவர்களின் விருத்தியினை அடிப்படையாகக் கொண்டதாகும். ஆனால் சாதாரண மாணவர்களுடன் விசேட தேவையடைய மாணவர்கள் வகுப்பறைச் செயற்பாட்டில் இணைக்கப்படும்பொழுது எவ்வாறு அவர்களது விருத்தி நிலை சாத்தியமாகும் என்பது கேள்விக்குறியாகும்.

சாதாரண மாணவர்களை போன்று ஆசிரியர்களும் பல சிக்கல்களை எதிர்நோக்குகின்றார்கள். விசேட தேவையுடைய மாணவர்கள் சாதாரண மாணவர்கள் என்ற இரு பிரிவினருக்கும்; ஒரே சமயத்தில் வகுப்பறைச் செயற்பாடுகளை மேற்கொள்வது என்பது மிகவும் சிக்கலாக உள்ளது. அதே போன்று விசேட தேவையுடைய மாணவர்களுக்கான குறிப்பாகக் கண் பார்வையற்றோர் போன்றவருக்கான கருவிகள் பயன்படுத்துவதில் சில ஆசிரியர்கள் சிக்கல்களை எதிர்நோக்கின்றார்கள். இவ்வாறு ஆசிரியர்களின் பிரச்சினைகளையும் குறிப்பிட முடியும்.

எனினும் சாதாரண பாடசாலைகளில் சாதாரண மாணவர்களுடன் இணைந்த வகுப்பறைச் செயற்பாடுகளில் விசேட தேவையுடைய மாணவர்கள் பல்வேறு சவால்களை எதிர்கொள்கிள்கின்றார்கள் என்பதை நாம் அறிந்து கொள்ள முடியும். மேற்படி விசேட தேவைகள் சார் மாணவர்கள் சாதாரண பாடசாலைகளில் எவ்வாறான சவால்களை எதிர்கொள்கின்றனர் என்பதையும் அவர்களுக்கான கற்றல் வாய்ப்பு எவ்வாறு அமைந்து காணப்படுகின்றது என்பதையும் ஆராயும் நோக்கில் இவ்வாய்வானது மேற்கொள்ளப்படுகிறது. அந்த வரிசையில் கற்பிட்டி கோட்டத் தமிழ்மொழி மூல சாதாரண பாடசாலைகளில் விசேட தேவையுடைய மாணவர்கள் கற்றலில் எதிர்கொள்ளும் சவால்களும் கற்றல் வாய்ப்புக்களும் எனும் தலைப்பிலமைந்த இவ் ஆய்வானது கனிஷ்ட இடைநிலைப்பிரிவில் உள்ள சகல தரங்களையும் தரங்களை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு முழுமையாக முன்னெடுக்கப்படுகின்றது.

## 1.2 ஆய்வுப் பிரச்சினை

ஆய்வுக்குட்பட்ட பாடசாலைகளில் ஒவ்வொரு மாணவனும் தமது வாழ்க்கை காலத்தில் எண்ணற்ற பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். அந்த வகையில் சாதாரண மாணவர்களை போன்றே விசேட தேவைகள் சார் மாணவர்களும் எதிர்காலச் சவால்களைப் பொருத்தமான வகையில் எதிர்கொண்டு வாழ்வில் வெற்றி பெறச் செய்ய வேண்டும். மேற்படி இம்மாணவர்கள் சவால்களைக் களைவதற்கான ஊடகமாகக் கல்வியைக் கையாள மாணவர்களை இசைவாக்கம் அடையச் செய்ய வேண்டும். அந்த வகையில் கல்வியை வழங்கும் முறைசார் நிறுவனமாகப் பாடசாலைகள் தொழிற்படுகின்றன. மேற்படி கல்வியைப் பெற்றுக்கொள்ள உதவும் கற்றல் கற்பித்தல் செயன்முறையினைச் சரியாக விளங்கிக்கொண்டு விசேட தேவைகள் சார் மாணவர்களைக் கற்றலில்

ஊக்குவிப்பதும் வினைதிறனுள்ள கற்றலுக்கு வகை செய்வதும் கல்விசார் துறையைச் சேர்ந்த அனைவரினதும் கடமையாகும்.

## 1.3 ஆய்வின் பிரதான நோக்கமும் குறிக்கோள்களும்

### பிரதான நோக்கம்

விசேட தேவைகள் சார் மாணவர்கள் கற்றலில் எதிர்கொள்ளும் சவால்களைக் கண்டறிவதுடன் அவர்களது கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் அவர்களது ஆற்றலை மேம்படுத்த வாய்ப்புகளை ஏற்படுத்தல்.

1. விசேட தேவைகள் சார் மாணவர்களுக்கு வகுப்பறையில் வழங்கப்படும் கற்றலுக்கான வாய்ப்புகளை கண்டறிதல்.
2. வகுப்பறையில் செயற்படுத்தப்படும் கற்பித்தல் செயன்முறைகளில் விசேட தேவைகள் சார் மாணவர்களின் பங்கு பற்றுதல் அறிதல்
3. விசேட தேவைகள் சார் மாணவர்களுக்கான கற்றல் கற்பித்தலை மேற்கொள்வதற்கான பாடசாலையில் காணப்படும் வளங்களைக் கண்டறிதல்.
4. விசேட தேவைகள் சார் மாணவர்கள் கற்றல் கற்பித்தலின் போது எவ்வாறான சவால்களை எதிர்கொள்கின்றனர் என்பதை இனங்காணல்.

## 2.0 இலக்கிய மீளாய்வு

விசேட தேவையுடைய மாணவர்கள் என்னும்போது சாதாரணமாகக் கற்கின்ற மாணவர்களை விட விசேடமான பல கருமங்களை ஆற்றியவாறு கல்வியை வழங்க வேண்டிய மாணவர்கள் வகுப்பறையில் காணப்படுகின்றனர் அவர்களை விசேட தேவையுடைய மாணவர்கள் எனக் குறிப்பிடலாம். (மகேசன், 2010)

சாதாரண வகுப்பறை ஒன்றிலிருந்து தனது கற்றல் செயற்பாட்டினை மேற்கொள்வதில் பெருமளவு இடருகின்ற மாணவர்களே விசேட தேவையுடையோராகக் கொள்ளப்படுகின்றனர். (செல்வநாயகம், 2007)

விசேட கல்வி சார் தேவைகளைக் கொண்ட மாணவர்கள் பல்லினத் தன்மை கொண்டவர்களாவர். அவர்கள் துரிதமாகவோ மெதுவாகவோ அல்லது மிகுந்த சிரமப்பட்டோ கற்கின்றார்கள். அவர்களது நடத்தை பொருத்தமானதாகவோ அல்லது பொருத்தமற்றதாகவோ அமையலாம். (திறந்த பல்கலைக்கழகம், 2007)

கற்றல் இயலாமைக் குறைபாட்டையுடைய மாணவர்கள் எழுதுதல், வாசித்தல், கிரகித்தல், ஞாபகப்படுத்தல் போன்ற கற்றல்சார் செயற்பாடுகளில் இடர்ப்படுபவர்களாகக் காணப்படுகின்றனர். அத்துடன் இத்தகைய கற்றல் இயலாமை எனப்படுவது நரம்புசார் ஒழுங்கீனம் ஆகும். இவ்வாறான இயலாமை கொண்ட மாணவர்கள் தமது சகபாடிகளைப் போல அல்லது அவர்களை விட ஆற்றல் கொண்டவர்களாவர். (Dash, 2000)

'மாணவர்கள் சாதனைகள் மற்றும் மேம்படுத்துவதில் பெற்றோர், குடும்பக்கல்வியின் தாக்கம்' என்ற ஆய்வின் மூலம் சமூகவியல் அடிப்படையில் விரிந்த குடும்பங்களின் சமூகமயமாக்கலுக்கான சாதகமான நிலைமைகள் அதிகரித்துக் காணப்படுமாயினும்

குடும்பத்தின் பருமன் காரணமாக, அங்குத் தோன்றக்கூடிய நிலைமைகள் உறுப்பினர்களைப் பாதிக்கலாம். குடும்பங்களில் கருக்குடும்பம், கூட்டுக்குடும்பம் என இரண்டு வகையாகச் சமூகவியலாளர்கள் பகுத்துக் காட்டுவர். குடும்ப உறுப்பினர்களின் கூட்டுப்பற்றி மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள், ஆளுமை விருத்தியில் அதன் பாதிப்புக்களை விரிவாக எடுத்துக்காட்டியுள்ளனர். (Desforges & Abouchaar, 2013)

மாணவர்களின் கற்றலில் வகுப்பறைச் சூழலின் தாக்கம் என்ற ஆய்வில் விளையாட்டுத் திடலிலும், இடைவேளையிலும், பாடசாலை நேரத்தின் பின்னரும் மாணவருடன் நல்லிணக்கத்துடன் கலந்துரையாடுவதன் மூலம் அவர்களது நண்பர்கள், பெற்றோர்கள், சகோதரர்கள், அயலில் வசிப்போர் ஆகியோரின் விருப்பு வெறுப்புக்களையும் தேவைகளையும் இனங்காண்க. பல்வேறு பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் மாணவர்களைப் பற்றி கொண்டிருக்கும் மனப்பாங்குகளைக் கண்டறியுங்கள். (An Int. J. 2016)

பிள்ளை எவ்வகையான இடர்களை எதிர்கொள்கின்றனர் என்பதை முதலில் ஆசிரியரும் பெற்றோரும் அறிதல் வேண்டும். உரிய முறையில் எழுதும் முறைமை கற்பிக்கப்பட்டிருந்தாலும் எழுதுவதில் இடர்படும் மாணவர்களுக்கு அதனைத் திருத்தி அமைக்க முடியும் என்ற நம்பிக்கை மாணவருக்கும் ஆசிரியருக்கும் இருத்தல் வேண்டும். எழுத்தை உறுப்பாகவும் வலுவின்றியும் எழுத முடியும் என்ற உறுதியையும் தன்னம்பிக்கையையும் கட்டியெழுப்புதல் முதற்கண் முக்கியத்துவம் பெறுகின்றது. (ஜெயராசா, 2008)

குறைப்பாடுடைய பிள்ளைக்காக வரையப்பட்ட விசேட நிகழ்ச்சித் திட்டத்தைப் பயனுறுதியுள்ளதாக மாற்றியமைக்க பெற்றோரின் உயிர்த்துடிப்பான பங்களிப்பு அவசியமானதாகும். (Sahnnon, 2004)

மெல்லக் கற்பவர்கள் ஒரு சாதாரண வகுப்பில் இருந்தாலும் குறைந்தளவினராக இருக்க வேண்டும். திறமையான மாணவர்களைப் போலவே வெற்றிக்கான பயணத்தில் ஆசிரியர்கள் அவர்களுடன் வர வேண்டும் என்று விரும்புகிறார்கள். ஒவ்வொரு கட்டத்திலும் குழந்தையைப் புகழ்வதும் ஊக்குவிப்பதும் அதிசயங்களையும் கற்றலில் மகிழ்ச்சியையும் உருவாக்குகின்றது. அற்பமான வெற்றிகளிலிருந்து பலனற்ற தோல்வியிலிருந்தும் கூடக் கற்றுக்கொள்ள ஆசிரியர்கள், பெற்றோர் உதவ வேண்டும். (Korikan, 2020)

பல்வேறுபட்ட கற்றல் தேவை எனும்போது ஒரு வகுப்பறையில் மீத்திறன் மாணவர்கள், மெல்லக்கற்கும் மாணவர்கள், கற்றல் இடர்ப்பாடுடைய மாணவர்கள், விசேட தேவையுடைய மாணவர்கள் எனப் பல வகையான மாணவர்கள் காணப்படுவார்கள். இவர்களின் கற்றல் பாங்கு, ஆற்றல், திறன் போன்றன ஒவ்வொருவருக்கும் வித்தியாசமானதாகும். இவர்கள் கற்றுக் கொள்வதில் வித்தியாசமான கற்றல் தேவையுடையவர்களாகக் காணப்படுவார்கள். (Anas & Nawastheen, 2019)

மீத்திறன் குழந்தைகள், சராசரி குழந்தைகள் ஆகியவர்களுக்கு மட்டும் ஆசிரியர் கல்வி கற்பிப்பதில்லை. மெதுவாகக் கற்கும் குழந்தைகள், இயக்கக் குறைவுடைய குழந்தைகள், தொந்தரவு தரும் குழந்தைகள் போன்றவர்களுக்கும் கல்வி கற்பிக்க வேண்டிய இன்றியமையாமை எல்லா ஆசிரியர்களுக்கும் உண்டு. இவர்களது கல்வி ஈவு 90 இற்குக்

குறைவாக இருக்கும். கல்வி ஈவு என்பது மாணவனது அடைவு வயதுக்கும் (Attainment Age) கால வயதுக்கும் (Chronological age) உள்ள விகிதமாகும். இந்த ஈவு வீதங்களும் பிள்ளைகளின் கற்றலில் ஆதிக்கம் செலுத்துவதாக ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். (Agnes Jerome,2012)

விசேட தேவைகளுடைய மாணவர்களுக்கான கலைத்திட்டமானது கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டதாகவும் அனைத்துக் கற்றல்சார் விடயங்களையும் சேகரித்து வைக்கும் தொழில் நுட்பத்தினை உடையதாகவும் கற்பித்தல் உபகரணங்களின் பயன்பாடு உடையதாகவும் இருத்தல் வேண்டும். (விசேட தேவைகள் சார் கல்விக்கான பல்துறை அணுமுறைகள், 2010)

செயற்பாட்டின் மூலம் கற்பிக்கும் திறன் அதாவது இருந்த இடத்தில் இருந்து கொண்டே கற்பிக்காது செயற்பாட்டின் மூலமாகக் கற்பிக்கும் திறனைக் கொண்டிருத்தல். மாணவர்களுக்குப் பொருத்தமாக இருக்கின்ற வேறு வகையான ஆனால் உயர்ந்த எதிர்பார்ப்புகளை ஸ்தாபிக்கத்தக்க திறமை அதாவது மாற்று வகையான மதிப்பீடுகளை அபிவிருத்தி செய்தல். (மகேசன், 2010)

## 3.0 ஆய்வு முறையியல்

இவ்வாய்வானது அளவை நிலை முறை மற்றும் பண்பறிசார் முறை என்ற ஆய்வு முறைகளை இணைத்ததாக மேற்கொள்ளப்பட்டுள்ளமையால் இவ்வாய்வு கலப்பு முறையிலான ஆய்வாகக் கருதப்படுகின்றது.

இந்த ஆய்விற்காகத் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகள் வசதி மாதிரி அடிப்படையிலும் கனிஸ்ட இடைநிலைப் பிரிவில் மெல்லக் கற்கும் மாணவர்கள் நோக்க மாதிரி அடிப்படையிலும் தெரிவு செய்யப்பட்டனர். மேலும் ஆய்விற்காக மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்ட பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் இலகு எழுமாற்று அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுத் தகவல்கள் திரப்பட்டன. ஆய்வு செயற்பாட்டில் தரவு சேகரித்தல் முறை இன்றியமையாததாகும். ஆய்வாளரையும், ஆய்வுக்குட்படுவோரையும் இணைக்கின்ற செயற்பாடாகத் தரவு சேகரித்தல் முறை அமைகின்றது. இங்கு சம்பந்தப்பட்ட பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் அவர்களின் பெற்றோர்கள் என்பவர்களுடனான வினாக்கொத்து, நேர்காணல், அவதானம் போன்ற அகவயமான உணவுர்களும் ஆய்வில் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளன.

இங்குத் தெரிவு செய்யப்பட்ட மாதிரிகளைக் கொண்டு ஆய்விற்கான தரவுகள் சேகரிக்கப்பட்டு முழு அங்கத்துவத்திற்கும் பொதுமைப்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன் தரவுகளினதும், தகவல்களினும் நம்பகத் தன்மையும், தகுதியும் உறுதிப்படுத்தும் வகையில் தரவுப் பகுப்பாய்வு செய்யப்படுகின்றது. இவ்வாறாக ஆய்வு முறையியலானது ஆய்விற்கான முக்கிய நுட்பங்களை உள்ளடக்கியதாக அமைகின்றது.

## 3.1 மாதிரித்தெரிவு

இது ஒரு கல்வியியல்துறை சார்ந்ததும் பாடசாலையை மையமாகக் கொண்டதுமான ஆய்வு என்பதால் பாடசாலை மற்றும் அதனுடன் தொடர்புடைய சமூகத்தைப் பாடசாலை

உள்ளீர்த்துக் கொள்கிறது. அந்தவகையில் சப்ரகமுவ மாகாணத்திலுள்ள 4 வலயங்களுள் ஒன்றான இரத்தினபுரி மாவட்டத்தில் அமைந்துள்ள 4 கல்வி வலயங்களில் ஒன்றான பலாங்கொடை கல்வி வலயம் பலாங்கொடை, இம்புல்பே, வெலிகபொல ஆகிய மூன்று கோட்டங்களைக் கொண்டதாகக் காணப்படுகின்றது.

இவ்வலயத்தில் மொத்தமாக 132 பாடசாலைகள் உள்ளன. இவற்றில் 1AB பாடசாலைகள் 10 உம், 1C பாடசாலை 19 உம் வகை 2 பாடசாலைகள் 63 உம், வகை 3 பாடசாலைகள் 40 உம் காணப்படுகின்றன. சிங்களம் மற்றும் தமிழ் மொழி அடிப்படையில் 132 பாடசாலைகள் இதில் இயங்கி வருகின்றன. குறிப்பாக 23 தமிழ் மொழி மூலமான பாடசாலைகள் உள்ளடங்குகின்றன. எனவே, இவை வலயத்தின் பாடசாலைகள் பற்றிய முழு விபரம் அட்டவணை 1இல் காணலாம்.

**அட்டவணை 1: பலாங்கொடை வலய பாடசாலைகள், ஆசிரியர், அதிபர், மாணவர்கள் எண்ணிக்கை**

| விபரம் | பாடசாலை | | | | | அதிபர் | ஆசிரியர்கள் | மாணவர்கள் | மாணவர்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1AB | 1C | வகை 02 | வகை 03 | | | | ஆண்கள் | பெண்கள் |
| எண்ணிக்கை | 10 | 19 | 63 | 40 | 132 | 132 | 2708 | 19257 | 20275 |
| மொத்தம் | 10 | 19 | 63 | 40 | 132 | 132 | 2708 | 39532 | |

**(மூலம்: பலாங்கொடை கல்வி வலயம்)**

குறித்த ஒரு ஆய்விற்கான தரவுகளைச் சேகரிப்பதற்காக மாதிரி எடுத்தல் முறை பயன்படுத்தப்படுகின்றது. ஆய்வாளன் பெரியதோர் குடித்தொகையில் இருந்துதான் சில வழிமுறைகளைப் பின்பற்றி தனக்குத் தேவையான தரவுகளைப் பெற பயன்படுத்தப்படும் ஓர் எளிய கூறாக இம்மாதிரி காணப்படுகின்றது.

அதனடிப்படையில் இம்புல்பே கல்விக்கோட்டத்தில் 1AB பாடசாலைகள் இரண்டும், 1C பாடசாலைகள் ஆறும், வகை II பாடசாலைகள் பதினேழும், வகை III பாடசாலைகள் பதினேழும் மொத்தமாக 42 பாடசாலைகள் காணப்படுகின்றன. இவ்வாய்விற்காக, தூரம், போக்குவரத்துப் பிரச்சினை, காலநிலை என்பவற்றைக் கருத்திற் கொண்டு வசதிமாதிரி அடிப்படையில் இரண்டு 1C பாடசாலைகளும், மூன்று வகை III பாடசாலைகளும் அடங்கலாக மொத்தம் ஐந்து பாடசாலைகள் ஆய்விற்காகக் தெரிவுசெய்யப்பட்டன.

தெரிவுசெய்யப்பட்ட ஐந்து பாடசாலைகளில்; உள்ள அதிபர்களும் தெரிவு செய்யப்பட்டதோடு, மேலும் இப்பாடசாலைகளின் ஆசிரியர்கள் 100 பேரில் 2:1 என்ற விகித அடிப்படையில் 50

ஆசிரியர்கள் இலகு எழுமாற்று மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். கனிஸ்ட இடைநிலையில் கல்வி கற்கும் மாணவர்களில் மெல்லக் கற்கும் 200 மாணவர்களில் இருந்து 2:1 என்ற விகிதத்தின் அடிப்படையில் நோக்கமாதிரி தெரிவின் அடிப்படையில் 100 மாணவர்களும், ஆய்வு மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்ட 100 மாணவர்களின் பெற்றோர்கள் இலகு எழுமாற்றுத் தெரிவு முறை அடிப்படையில் 2:1 எனும் விகிதத்தில் 50 பேர் செய்யப்பட்டுள்ளனர். இவ்வாறாகத் தெரிவு செய்யப்பட்ட அதிபர்களினதும், மாணவர்களினதும், பெற்றோர்ளினதும், ஆசிரியர்களினதும் விபரம் பின்வரும் அட்டவணை 2 இன் மூலம் காட்டப்படுகின்றது.

### அட்டவணை 2 : மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை மற்றும் அதிபர், ஆசிரியர் விபரம்

| | பாடசாலைகள், அதிபர்கள், ஆசிரியர்கள்,எண்ணிக்கை | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| இல | பாடசாலை பெயர் | பாடசாலை வகை | அதிபர்கள் | மாதிரித் தெரிவு | ஆசிரியர்கள் | மாதிரி தெரிவு | மாணவர்கள் | மாதிரி தெரிவு | பெற்றோர்கள் | மாதிரி தெரிவு |
| 01 | A | 1C | 01 | 1 | 36 | 16 | 46 | 23 | 23 | 11 |
| 02 | B | 1C | 01 | 1 | 29 | 15 | 64 | 64 | 64 | 16 |
| 03 | C | Type - II | 01 | 1 | 15 | 8 | 28 | 28 | 28 | 7 |
| 04 | D | Type - II | 01 | 1 | 12 | 6 | 36 | 36 | 36 | 9 |
| 05 | E | Type - II | 01 | 1 | 10 | 5 | 26 | 26 | 26 | 7 |
| மொத்தம் | | | 05 | 5 | 102 | 50 | 200 | 100 | 100 | 50 |

(மூலம்: ஆய்வாளனால் தயாரிக்கப்பட்டது)

## 4.0 ஆய்வுப் பகுப்பு

### 4.1 விசேட தேவைகள் சார் மாணவர்களுக்கு வகுப்பறையில் வழங்கப்படும் கற்றலுக்கான வாய்ப்புக்களைக் கண்டறிதல்

#### 4.1.1 பெற்றோர்கள் கல்வியில் கவனமெடுத்தல் தொடர்பான பகுப்பு

விசேட தேவைகள்சார் மாணவர்களுக்குப் பெற்றோர்களது பங்களிப்பு, கண்காணிப்பு மிக அவசியம். இவ்வாறான கண்காணிப்புடன் இணைந்த கற்றலில் இறுதியில் மாணவர்களது கல்வியில் சிறப்பான விருத்தி ஏற்பட வழிவகுக்கும். இம்மாணவர்களது கற்றலில் பெற்றோர்கள் கவனமெடுக்காதுவிடின் கற்றலில் பின்னடைவு உருவாகும். மேற்படி விசேட தேவைகள் சார் மாணவர்களது கல்வியில் பெற்றோர்களின் பங்களிப்பு பற்றிய மாணவர்களின் கருத்து பின்வரும் உருவில் காட்டப்படுகின்றது.

**உரு 4.1 பெற்றோர்களின் கல்வியில் கவனமெடுத்தல் தொடர்பான மாணவர்களது கருத்து**

ஆய்வுக்குப்படுத்தப்பட்ட 60 மாணவர்களில் தமது கற்றலில் பெற்றோர்கள் கவனமெடுத்தல் நன்றாக அமைந்திருப்பதாக 13 மாணவர்கள் என 22 சதவீமானவர்கள் பதிலளித்தனர் 22 மாணவர்கள் ஓரளவேனும் தமது பெற்றோர்கள் கவனமெடுப்பதாக 37 சதவீதமானவர்கள் பதிலளித்தனர். 25 மாணவர்கள் தமது பெற்றோர்கள் கவனமெடுப்பதில்லை என 41 சதவீதமானவர்கள் பதிலளித்தனர்.

### 4.2 வகுப்பறையில் செயற்படுத்தும் கற்பித்தல் செயன்முறைகளில் விசேட தேவைகள் விசேட தேவைகள்சார் மாணவர்களின் பங்கு பற்றலை அறிதல்

#### 4.2.1 பாடசாலை மட்ட கலை நிகழ்ச்சிகளில் பங்குபற்றும் வாய்ப்பு தொடர்பான பகுப்பு

சாதாரண மாணவர்களைக் காட்டிலும் விசேட தேவைகள்சார் மாணவர்களைப் பொருத்தவரை ஏனைய செயற்பாடுகளில் சிறப்பான ஆற்றல்களைக் கொண்டிருப்பர். குறித்த ஆற்றல்கள் தொடர்பாக ஒவ்வொரு ஆசிரியர்களும் கவனம் செலுத்த வேண்டும். இவர்களைப் பாடசாலைமட்ட கலை நிகழ்ச்சியில் ஈடுபடுத்துவது தொடர்பான வினாவானது மாணவர்களிடம் வினவப்பட்டபோது மாணவர்கள் பின்வருமாறு பதிலளித்தனர். இது பின்வருமாறு உருவில் காட்டப்படுகின்றது.

**4.2. பாடசாலை மட்ட கலை நிகழ்ச்சிகளில் பங்கு பற்றும் விதம் பற்றிய மாணவர்களின் பதில்**

பாடசாலை மட்ட கலை நிகழ்ச்சியில் பங்கு பற்றும் வாய்ப்பு தொடர்பாக மாதிரியாகத் தெரிவுசெய்யப்பட்ட 60 மாணவர்களிடம் வினவப்பட்ட போது 22 சதவீதமான மாணவர்கள் தாம் கலை நிகழ்ச்சியில் பங்குபற்றுவதற்கான வாய்ப்பு நன்றாக அமைந்துள்ளது எனவும் 33 சதவீதமான மாணவர்கள் தமக்கான வாய்ப்பு ஓரளவு கிடைக்கின்றது எனவும் மற்றைய 45 சதவீமான மாணவர்கள் பங்குபற்றுவதற்கான சந்தர்ப்பம் குறைவு எனவும் குறிப்பிட்டிருந்தனர்.

### 4.3 விசேட தேவைகள் சார் மாணவர்களுக்குக் கற்றல் - கற்பித்தலை மேற்கொள்வதற்காகப் பாடசாலையில் காணப்படும் வளங்களை அறிதல்.

#### 4.3.1 ஆளணிவளம் தொடர்பான பகுப்பு

எல்லாப் பாடங்களுக்கும் ஆசிரியர் உள்ளனரா? இல்லையெனில் அந்தப் பாடம் எது என ஆசிரியர்கள், மாணவர்களிடம் வினவியபோது ஆய்வுக்கு உட்பட்ட பாடசாலையில் கணிதம், சிங்களம், சித்திரம் போன்ற பாடங்களுக்கு ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதாக மாணவர்கள். இது பின்வரும் அட்டவணையில் காட்டப்படுகின்றது.

**அட்டவணை 3 : பாடங்களுக்கான ஆசிரியர்கள் இன்மை தொடர்பாக மாணவர்கள், ஆசிரியர்களால் அளிக்கப்பட்ட பதில்கள்**

| பாடங்கள் | அளித்த பதில்கள் (%) | |
|---|---|---|
| | மாணவர்கள் | ஆசிரியர்கள் |
| கணிதம் | 15% | 23% |
| மொழிப்பாடங்கள்<br>(தமிழ், ஆங்கிலம், சிங்களம்) | 42% | 42% |
| சித்திர பாடம் | 33% | 20% |

**(மூலம்: ஆய்வாளனால் தயாரிக்கப்பட்டது.)**

மேற்படி வினாவில் ஆசிரியர்களிடம் வினவப்பட்டபோது 35 ஆசிரியர்களில் 8 ஆசிரியர்கள் கணித பாட ஆசிரியர்கள் பாடசாலையில் இல்லை என பதில் அளித்தனர். இது 23 சதவீதமாகும். 15 ஆசிரியர்கள் மொழி தொடர்பான ஆசிரியர் இல்லையெனவும் 42 சதவீதமாக அமைகின்றது. 12 ஆசிரியர்கள் சித்திர பாடத்திற்கு ஆசிரியர்கள் இல்லை என 20 சதவீனமானவர்கள் பதிலளித்தனர்.

#### 4.3.2 கற்றல் உபகரணங்கள் தொடர்பான பகுப்பு

ஆய்வுக்குட்பட்ட பாடசாலைகளில் கற்றலுக்கான உபகரணங்கள் தொடர்பாக மாணவர்களிடம் வினவியபோது மாணவர்கள் பின்வருமாறு தமது துலங்களை வெளிப்படுத்தினர். இது பின்வரும் உருவில் காட்டப்படுகின்றது.

**உரு 4.3 பாடசாலையில் காணப்படும் கற்றல் உபகரணங்கள் தொடர்பான மாணவர்களது கருத்து**

### 4.3.3 ஆசிரியர்களது ஊக்கல் தொடர்பான மாணவர்களது கருத்து

மாணவர்களுக்கான ஊக்குவித்தல் வழங்கப்படுகின்றமை தொடர்பாக மாதிரிகளாகத் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களிடம் வினவியபோது மாணவர்கள் பின்வருமாறு தமது துலங்களை வெளிப்படுத்தினர். இது பின்வரும் உருவில் காட்டப்படுகின்றது.

### 4.4 ஆசிரியர்களது ஊக்கல் தொடர்பான மாணவர்களது கருத்து

60 மாணவர்களில் 15 மாணவர்கள் கற்றலின் போது ஆசிரியர்களினால் தமக்கான ஊக்கல் நன்றாக வழங்கப்படுவதாக 25 சதவீதமானவர்கள் பதிலளித்தனர். 20 மாணவர்கள் ஓரளவேனும் தமக்கான ஊக்கல் வழங்கப்படுவதாக 33 சதவீதமானவர்கள் பதிலளித்தனர். 25 மாணவர்கள் தமக்கான ஊக்கல் வழங்கப்படுவதில்லை என 42 சதவீமானவர்கள் பதிலளித்தனர்.

### 4.4 சாதாரண பாடசாலைகளில் விசேட தேவைகள் சார் மாணவர்களுக்கு வகுப்பறையில் கற்றல் கற்பித்தலில் வழங்கப்படும் கற்றலுக்கான வாய்ப்புக்களைக் கண்டறிதல்.

பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்கள் பல்வேறு பிரிவுகளை உடையவர்களாக இருப்பர். சாதாரண பாடசாலைகளில் விசேட தேவைகள் சார் மாணவர்களுக்கு வகுப்பறையில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை அவதானிப்பதற்கான பல்வேறு உத்திகளைக் கையாள்வதற்கான நடைமுறைகளைவ் செயற்படுத்துவதற்கு முறையான கண்காணிப்பு அவசியமாகும். அதனைக் கருத்திற்கொண்டு தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகள் மட்டத்தில் மாணவர்களின் கற்றல் விருத்தி நிலைகளைக் கண்டறிதல் முக்கியமானதாகும்.

### 4.4.1 மாணவர்களை வழிகாட்டக்கூடிய பயிற்சி நுட்பங்கள் வலய, மாகாண மட்டங்களில் வழங்கப்படுகின்றமை தொடர்பான பகுப்பு.

வலய மாகாண மட்டங்களில் பயிற்சி நுட்பங்கள் வழங்குதல் தொடர்பாக ஆசிரியர்களிடம் வினவிய போது ஆசிரியர்கள் பின்வருமாறு பதிலளித்தனர். இது பின்வரும் உருவில் காட்டப்படுகின்றது.

### உரு. 4.5 பயிற்சி நுட்பங்கள் தொடர்பான ஆசிரியர்களது கருத்து

இவ்வினாவிற்கு 5 ஆசிரியர்கள் தமக்கான பயிற்சி வழிகாட்டல்கள் மிகவும் நன்றாக இடம்பெறுவதாக 14 சதவீதமானவர்கள் தெரிவித்திருந்தனர். 8 ஆசிரியர்கள் பயிற்சி நன்றாக இடம்பெறுவதாக 23 சதவீதமானவர்கள் பதிலளித்தனர். தமக்கான பயிற்சி ஓரளவேனும் இடம்பெறுவதாக 15 ஆசிரியர்கள் பதில் அளித்திருந்தனர். இது 43 சதவீதமாகும் ஆகும். 7 ஆசிரியர்கள் தமக்கான பயிற்சி வழிகாட்டல்கள் குறைவாக இடம்பெறுவதாக 20 சதவீதமானவர்கள் பதிலளித்தனர்.

### 4.4.2 குழுச் செயற்பாட்டின் போதான அவதானம் தொடர்பான பகுப்பு

குழுச் செயற்பாடுகளின் போது ஒவ்வொரு மாணவனதும் கற்றற் செயற்பாட்டை அவதானிப்பது தொடர்பாக ஆசிரியர்கள் காட்டிய துலங்கள் பின்வரும் அட்டவணையில் காட்டப்படுகின்றது.

**அட்டவணை 4 : குழுச் செயற்பாட்டின் போதான அவதானம் தொடர்பாக ஆசிரியர்களினால் அளிக்கப்பட்ட பதில்கள்**

| **ஆசிரியர்களது கூற்றுக்கள்** | **சதவீதம்** |
|---|---|
| நன்று | 29% |
| ஓரளவு | 57% |
| குறைவு | 14% |

**(மூலம்: ஆய்வாளனால் தயாரிக்கப்பட்டது.)**

## 5.0 ஆய்வுத் தீர்வும் பரிந்துரைகளும்

### 5.1 வழிகாட்டல் சேவை தொடர்பான பகுப்பு முடிவுகள்

ஆய்வுக்குட்பட்ட பாடசாலைகளில் பெரும்பாலான மாணவர்களிடம் வழிகாட்டல் ஆலோசனை பெறுவது தொடர்பான அறிவு காணப்படவில்லை. விசேட தேவைகள் சார் மாணவர்களின் துலங்கல்கள் பாடசாலைகளில் வழிகாட்டல் ஆலோசனைச் சேவையை தாம் குறைவாகவே பெற்றுக்கொள்வதாகக் குறிப்பிட்டிருந்திருந்தமை அறிய முடிந்தது. ஆய்வுக்குட்பட்ட பாடசாலைகளில் வழிகாட்டல் ஆலோசனை தொடர்பாகக் குறைவான ஆசிரியர்களே பயிற்சி பெற்றிருப்பதனை ஆசிரியர்களின் துலங்களிலிருந்து கண்டறிய முடிந்தது. பாடசாலைகளில் ஆசிரியர்களினதும் மாணவர்களினதும் பதில்களுக்கு அமைவாக விசேட தேவைகள்சார் மாணவர்களது சவால்களுக்கான வழிகாட்டல் ஆலோசனைகள் குறைவாக வழங்கப்பட்டுள்ளமையை அறிய முடிந்தது.

- விசேட தேவைகள்சார் மாணவர்களுக்கான சவால்கள் எழும்போது வழிகாட்டல் ஆலோசனை பெற வேண்டும். என்பதனை மாணவர்களுக்குத் தெளிவுபடுத்தி இது தொடர்பான அறிவினைப் பாடசாலை மட்டத்தில் முன்னெடுப்பது அவசியமாகும்.
- விசேட தேவைகள்சார் மாணவர்களது சவால்களைக் களைந்து வழிகாட்டல் ஆலோசனை பெற்றுக்கொடுக்க வேண்டிய பொறுப்பு தமக்கேயுள்ளது என்பதை அறிந்து அதற்கேற்ற செயற்பாடுகளை (பயிற்சிகள், வழிகாட்டல்கள்) முன்னெடுப்பது அவசியமாகும்.

- பாடசாலைகள் இவ்விசேட தேவைகள் சார் மாணவர்கள் தொடர்பான சமூகத்தின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்யும் வகையிலான செயற்பாடுகளைப் பாடசாலை மட்டத்தில் முன்னெடுப்பது அவசியமாகும்.

ஆய்வுக்குட்படுத்தப்பட்ட பாடசாலைகளில் ஆசிரியர்கள் மாணவர்களுடனான இடைத்தொடர்பானது ஓரளவேனும் சிறப்பாகக் காணப்படுவதனை அறிய முடிந்தது. மேலும் விசேட தேவைகள் சார் மாணவர்களில் அனேகமானோரது துலங்களின் படி ஆசிரியர் தம்முடன் இடைத்தொடர்புகளை ஓரளவேனும் பேணி வருவதைத் தெரிவித்தமை, அனேக ஆசிரியர்களின் துலங்கலானது மாணவர்களிடம் சிறப்பான தொடர்பைப் பேணுவதாகத் தெரிவித்தமை அறிய முடிந்தது.

- மாணவர்கள் ஆளுக்காள் வேறுபட்ட ஆளுமையுடையவர்கள் என்பதனை ஆசிரியர் கருத்திற்கொண்டு ஆளுமைகளை விருத்தியுறச் செய்ய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.
- விசேட தேவைகள் சார் மாணவர்களுடனான இடைத்தொடர்புகளைச் சிறப்பாகப் பேணுவதன் மூலம் அவர்களது கற்றலில் முன்னேற்றத்தை ஏற்படுத்த ஆசிரியர் தான் கடமைப்பாடு உள்ளவர்கள் எனச் செயலாற்ற வேண்டும்.
- ஆசிரியர்கள் விசேட தேவைகள்சார் மாணவர்களது கற்றல் சவால்களைக் களைவதற்கு இம் மாணவர்களுடனான தொடர்பினைச் சிறப்பாகப் பேணி வழிகாட்டல்களையும் ஊக்குவித்தலும் வழங்குதல் ஆசிரியரது கடமையாகும்.

ஆய்வுக்குட்பட்ட பாடசாலைகள் கஸ்டப் பிரதேசங்களில் அமைந்து காணப்படுவதனால் அதற்கான வளங்கள் சீராக அமையப் பெறவில்லை என்பதனை அறிய முடிந்தது. மாணவர்களில் 83 சதவீதமானோர் தமது பாடசாலையில் கற்றலை மேற்கொள்வதற்கான வளப்பற்றாக்குறை காணப்படுவதாகப் பதில் அளித்ததனை அறிய முடிந்தது. மேலும் பாடசாலைகளின் பௌதீக வளங்கள் மாணவர்களது கல்வி நடவடிக்கைகளில் நேரடியாகவும், மறைமுகமாகவும் தாக்கத்தை ஏற்படுத்தியதனை இனங்காண முடிந்தது.

- பாடசாலைக்கு அவசியமான பௌதீக வளங்களையும் ஆளணி வளங்களையும் பெற்றுக்கொள்வதில் பாடசாலை நிர்வாகமும் அதிபரும் அதிக அக்கறை செலுத்துதல் வேண்டும். பாடசாலையில் காணப்படும் வளங்களை வினைத்திறனாகப் பயன்படுத்தி கற்றல் செயற்பாட்டை ஆசிரியர்கள் ஒழுங்கமைக்க வேண்டும்.
- தொண்டு நிறுவனங்கள், சமூக நலன் விரும்பிகள், பழைய மாணவர் சங்கம் என்பவர்களிடமிருந்து சில உதவிகளைப் பெற்று வளப்பற்றாக்குறையைக் குறைப்பதற்குப் பாடசாலை செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்.

ஆய்வுக்குட்பட்ட கனிஸ்ட இடைநிலை மாணவர்களிடத்தில் மொழித்தேர்ச்சி இன்மையால் கிரகித்துக் கொள்ளும் தன்மையானது குறைவு என்றே கூறலாம். அதாவது ஆசிரியர்கள் - கூறுபவற்றை அவர்களால்; கிரகித்துக் கொள்ள முடியாதவர்ககளாகக் காணப்படுகின்றனர். இதற்குக் காரணம் கவனக்குறைவு என்றே கூறமுடியும். அதாவது கனிஸ்ட இடைநிலை மாணவர்கள் மனதினை ஒரு நிலைப்படுத்திக் கற்பிப்பவற்றைக் கேட்டுக் கொள்ளமாட்டார்கள். இதனால் அவர்களிடத்தில்; கிரகிப்பு என்பது குறைவாக உள்ளது எனலாம்.

இவ்வாறான கிரகித்தலில் மாணவர்கள்; இடர்படுகின்ற வேளையில் அவர்கள் பாடத்தில் கவனம் செலுத்துகின்ற வகையில் ஆசிரியர்களின் கற்பித்தல் செயற்பாடானது அமைய வேண்டும். இதனூடாக மாணவர்கள் மத்தியில் முறையாக வாசிப்பதற்கும், எழுத்து பிழைகளின்றி எழுதுவதற்கும் கற்பிக்கின்ற விடயத்தைப் பிள்ளைகள் விளங்கிக் கொள்வதற்கு வகுப்பறையில் படங்களைத் தொங்கவிட்டுக் கற்பித்தலை மேற்கொள்ளலாம். அதுமட்டுமன்றி விளையாட்டுக்கள் மூலமான கற்பித்தலை மேற்கொள்வதன்; மூலமாகவும் பிள்ளையின் கிரகித்தல் ஆற்றலை விருத்தியாக்கிக் கொள்ள முடியும். கனிஸ்ட இடைநிலை மாணவர்களிடத்தில் கவனக் குறைவானது அதிகளவில் காணப்படும். ஏனெனில் அவர்கள் சிறுவயதினராகையால் அவர்களிடத்தில் விளையாட்டுத் தனமானது காணப்படுகின்ற பருவத்தினர் என்பதாகும். அதனால் அவர்களின் கவனத்தைச் சிதரவிடாத வகையில் வகுப்பறையினைக் கற்பதற்குரிய கவின்நிலை உடையதாக மாற்றியமைக்க வேண்டியது ஆசிரியரின் கட்டமையாகும். கற்பிப்பது அவர்களின் மனதில் இலகுவாகப் பதியும் வகையில் அவர்களிடத்தில் சிறந்த புலக்காட்சியை ஏற்படுத்தும் வகையில் ஆசிரியரின் கற்பித்தல் செயற்பாடானது அமைய வேண்டும். இதனை வகுப்பறையில்; ஆசிரியரின் செயற்பாடு மட்டும் ஏற்படுத்தாது இதற்கு வீட்டுச் சூழலின் பங்களிப்பு முக்கியமான ஒன்றாகும். அந்த வகையில்; பிள்ளைகளிடத்தில் விடயங்களைச் செவிமடுத்துவற்கு ஊக்கப்படுத்தல், அவற்றின் மூலமாகத் தமது செயற்பாடுகளை கிரகித்து அவற்றை ஞாபகத்தில் வைத்துக் கொள்வதற்கான பயிற்சிகளை ஆசிரியர்கள் வழங்கின்ற போது மாணவர்களின் கிரகித்தல் திறனை விருத்தியாக்கிக் கொள்ள முடியும். இதனூடாக விசேடதேவைசார் மாணவர்களின் கற்றல் விருத்தியை அதிகரித்துக் கொள்ள முடியும்.

விசேடதேவைகள்சார் மாணவர்களது குறைபாட்டிற்கேற்பக் கற்பித்தலை மேற்கொள்வதாக அதிகமான ஆசிரியர்கள் தெரிவித்திருந்தபோதிலும் அதனை 100 வீதம் மேற்கொள்ளவில்லை எனவும் தெரிவித்தமை முக்கியமானதாகும். சாதாரண பாடசாலைகளில் பல்வகைத்தன்மை கொண்ட மாணவர்கள் காணப்படுவதால் ஒவ்வொரு மாணவர்களது குறைப்பாட்டை அறிந்து கற்பித்தலை மேற்கொள்வது கடினமானது என ஆசிரியர்கள் கூறியிருந்தனர்.

எழுத்து வாசிப்பு தேர்ச்சிகளை விசேட தேவைகள்சார் மாணவர்களில் அதிகமானோர் குறைவாகக் கொண்டிருப்பதால் வகுப்பறை மட்டத்தில் முழுமையாகத் தேர்ச்சிகளை எய்த முடிவதில்லை என்பதும் கண்டறியப்பட்டது.

மாணவர்களது குறைபாட்டினை அறிந்த ஆசிரியர்கள் அவர்களது குறைப்பாட்டிற்கேற்றாற்போல அவர்களை வகைப்படுத்தி விசேட செயற்றிட்டங்கள் மூலம் அவர்களது கற்றல் சவால்களைக் களைய எத்தனித்தல்

கற்றல் கற்பித்தலை விரிவுபடுத்தும் கருவிகளையும் இசைவுபடுத்திக் கொள்வதற்கு ஒவ்வொரு ஆசிரியரும் முயற்சி எடுத்தல் அவசியமாகும்.

மேலதிகமான விசேட செயற்றிட்டங்கள் மூலம் இம் மாணவர்களிடம் கற்றலில் முன்னேற்றத்தை ஏற்படுத்த பாடசாலை நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் ஆசிரியர்கள் செயல்நிலை ஆய்வுகளில் அதிகமாக ஈடுபடுதல் அவசியமாகும்.

மாணவர்களது கற்றல் முன்னேற்றத்தை ஏற்படுத்தும் வகையிலான இணைப்பாடவிதான செயற்பாடுகள் ஆசிரியர்களால் திட்டமிடப்படுதல் அவசியமாகும். மேலும் மாணவர்களது பல்வகைத் தன்மை அறிந்து இணைப்பாடவிதான செயற்பாடுகளை ஒழுங்கமைப்பதில் ஆசிரியர் முயற்சிகளை முன்னெடுக்க வேண்டும்.

## ஆலோசனைகள்

வகுப்பறையில் மாணவர்களை ஒருமித்துச் செயற்படக் கூடியவாறு செயற்பாட்டுத்திட்டங்களை ஆசிரியர்கள் தயாரிக்க வேண்டும். மாணவர்களை வகுப்பறையில் ஊர் மட்டத்தில் பிரிக்காமல் சமமானவர்களாகக் கருத வேண்டும் மாணவர்களின் துலங்கல் சிறப்பாக வெளிப்படக் கூடிய வகையில் ஆசிரியர்கள் தூண்டிகளை ஏற்படுத்த வேண்டும், அதேநேரம் மாணவர்களின் தனியாள் வேறுபாட்டிற்கு ஏற்பக் கற்பித்தலை முன்னெடுக்க வேண்டும். பெற்றோர் வீட்டில் சரியான அரவணைப்பைப் பிள்ளைகளுக்கு அளிக்க வேண்டும். பிள்ளைகளின் வகுப்பறைக் கற்பித்தல் தொடர்பில் அக்கறை செலுத்துவதன் மூலம் அவர்களது கற்றல் அடைவுகளை அதிகரிக்க முடியும்.

## 6.0 முடிவுரை

இந்த ஆய்வின் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு பெறப்பட்ட தரவுகளைப் பகுப்பாய்வு செய்வதனூடாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட முடிவுகளையும், விதப்புரைகளையும் உள்ளடங்கும் வகையில் அமைகின்றன. சாதாரண பாடசாலைகளில் விசேட தேவையுடைய மாணவர்கள் கற்றல் வாய்ப்புக்கள் என்னும் ஆய்வுப் பிரச்சினையுடன் தொடர்புபட்டதாக மேலும் பல பிரச்சினைகள் ஆய்வின்போது கண்டறியப்பட்டன. குறிப்பாக விசேட தேவையுடைய மாணவர்கள் சாதாரண மாணவர்களுடன் இணைந்த வகுப்பறைச் செயற்பாட்டில் ஏற்படும் நன்மை தீமைகளை அறிதல், விசேட தேவைகள் உடைய மாணவர்களது வகுப்பறை செயற்பாட்டில் ஏற்படும் சவால்களை நீக்குவதற்காக ஆசிரியர்கள் மேற்கொள்ளும் செயற்பாடுகளைக் கண்டறிதல், சாதாரண பாடசாலைகளில் வகுப்பறைச் செயற்பாட்டில் விசேட தேவையுடைய மாணவர்களுக்குக் கற்றல் - கற்பித்தல் உபகரணங்களைப் பயன்படுத்துவதன் முக்கியத்துவம், சாதாரண பாடசாலைகளில் விசேட தேவையுடைய மாணவர்களுக்கான சிறந்த வகுப்பறைச் செயற்பாட்டு நுட்பங்களும் அவற்றினைச் சிறந்த முறையில் பயன்படுத்துவதில் ஆசிரியர்களது பங்களிப்பினை அளவிடுதல் போன்ற எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய ஆய்வுக்களங்களும் இவ்வாய்வில் முன்மொழியப்படுகின்றன. எனவே சேகரிக்கப்பட்ட தரவுகள் பகுப்பாய்வுக்குட்படுத்தப்பட்டுப் பெறப்பட்ட முடிவுகள் முன்வைக்கப்பட்டு அதற்கான விதப்புரைகளும் இங்கு முன்வைக்கபட்டுள்ளன.

## துணைநின்றவை


- அருள்மொழி, செ. (2008), கல்வி ஆய்வு முறைகள், எவகிறீன் அச்சகம், மட்டக்களப்பு.
- அருள்மொழி, செ. (2010), பிள்ளை வளர்ச்சியும் கற்றலும், ராஜா புத்தக நிலையம், மட்டக்களப்பு.
- இலங்கை திறந்த பல்கலைக்கழகம், (2007), விசேட நிலைமைகள் மற்றும் கற்றல் தேவைக்கான அறிமுகம், நாவல, நுகேகொட.
- இலங்கை திறந்த பல்கலைக்கழகம், (2010), விசேட தேவைகள் சார் கல்விக்கான பல்துறை அணுகுமுறைகள், நாவல, நுகேகொட.

- செல்வநாயகம், இ. (2007), சீரிய சிந்தனை, திருவள்ளுவர் அச்சகம், நல்லூர், யாழ்ப்பாணம்.
- சிவநடேஸ், செ. (2006), பாடசாலை அபிவிருத்தி கல்வியற்சமூகம், கிழக்கு பல்கலைக்கழகம், வந்தாறுமூலை, செங்கலடி.
- சின்னத்தம்பி, மா. (2005), பாடசாலை வழிகாட்டல் புதிய சேவை, அகவிழி வெளியீடு.
- மகேசன், ஏ. (2010), விசேட கல்வியும் ஆலோசனை வழங்கலும், திருகோணமலை வீதி, மட்டக்களப்பு.
- தனராஜ். தை, (2005), செயல்வழி ஆய்வு ஓர் அறிமுகம், குமரன் புத்தக இல்லம், கொழும்பு.
- பரமானந்தம், சு. (2007), உட்படுத்தல் கல்வி, அகவிழி வெளியீடு.
- ஜெயராசா, சபா. (2008), ஆபத்து விளிம்பிலுள்ள கற்போர், மேமடு பதிப்பகம், கொழும்பு.
- Agnes Jerome, (2012), The Journal of Education Research, Francis Ltd.
- Anas, P. L., & Nawastheen, F. M. (2019). Teachers' perception towards fulfilling diverse learners' needs in the classroom teaching-learning process. South Eastern University International Arts Research Symposium-2019, http://ir.lib.seu.ac.lk/handle/123456789/4170
- An Int. J. (2016), Teaching of Education and Applied Social Sciences, Oxford Journals Press.
- Appaji Korikan, A. (2020), Providing Educational Opportunities to them to be a successful learner, International Journal of Social Sciences.
- Desforges & Abouchaar, (2013), **The impact of parental involvement, parental support and family education on pupil achievement and adjustment: a literature review,** Digital Education Resource Archive.
- Dash.M, (2000). Education of exceptional children, Atlantic publishers and distributers, Vishal enclave, New Delhi.
- Panda, K, C. (2007), Education of exceptional children, Vikas publishing House, New Dehli.
- Shannon. L, Berg, (2004), The research on the advanatages in disadvnatges of the inclusion of students with disabilities into regular education classrooms, University of Wisconsin-Stout.
- Tim loreman, Joanne, D. (2006), Inclusive education, 130, Nelson Manicam Road, Aminjikarai, Chennai.


*****************

# கற்பித்தலும் மதிப்பிடுதலும் Kappiya Ilakiyangal-Teaching and Evaluation

**த.முத்துக்குமார் | T. Muthukkumar**

முனைவர்பட்ட ஆய்வாளர், கல்வியியல் துறை, அழகப்பா பல்கலைக்கழகம்
காரைக்குடி-3, தமிழ்நாடு, இந்தியா, yokimuthu@gmail.com
orcid id - https://orcid.org/0000-0001-5689-5112

**முனைவர் மு. சுதா | Dr. M. Sudha**

இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை, அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி-3,
தமிழ்நாடு, இந்தியா, sutham@alagappauniversity.ac.in, orcid id -
https://orcid.org/0000-0002-6938-7149

**ஆய்வுச்சுருக்கம்**

ஒரு மனிதனை முழுமை பெறச்செய்வது கல்வி. அக்கல்வியின் வழி அடுத்தடுத்த தலைமுறையினரைத் தகுதிப்பாடு உடையவர்களாக மாற்றுபவர்கள் ஆசிரியர்கள். ஆசிரியப்பணி என்பது அறப்பணி. அதில் அர்ப்பணிப்பு வேண்டும். அவற்றிலும் தாய்மொழிவழிக்கல்வியின் வாயிலாகப் பயன்தரக்கூடிய சிறப்பான கல்வியை மாணவர்களுக்குக் கொண்டுசேர்ப்பது இன்றியமையாத ஒன்றாகும்.

குறிப்பாக இலக்கியப் பாடங்களை, அவை தரும் வழிகாட்டுதல்களை, அறிவுரைகளைக் கற்றுத் தரும் வாழ்வியல் விழுமியங்களை, அவற்றில் பொதிந்து கிடக்கும் உண்மைகளை மாணவர்கள் மனத்தில் பதியச்செய்து அதன்வழி வரும் இளையதலைமுறையினர் தங்கள் வாழ்வில் சிறந்த நிலையை அடைவதற்குக் கல்வி கற்பிக்கும் ஆசிரியரே பெருந்துணையாக வேண்டும்.

மதிப்பெண்ணுக்காக மனனம் செய்யும் நிலைமாறி அவ்விலக்கியங்கள் உணர்த்தும் வாழ்வியலைப் பழக்கவழக்க பண்பாடுகளைப் பின்வருவோர் அறிந்து உணர்ந்து தம் வாழ்வில் பின்பற்றவும், ஒரு சமுதாயம் நற்சமுதாயமாக வளரவும் ஆசிரியர்களே உறுதுணையாக வேண்டும். இன்றைய சமுதாயத்தைச் சரிசெய்ய காவல்துறையும் நீதித்துறையும். வருங்காலச் சமுதாயத்தைச் சரிசெய்யக் கல்வித்துறையாலேயே இயலும் என்பது மறுக்கவியலா உண்மை.

அந்தவகையில் தமிழ் இலக்கியங்கள் காலத்தை வென்று தமிழர்தம் பெருமையை இன்றளவும் உலகளவில் கொண்டு சேர்த்தவை என்றால் அது மிகையில்லை. சங்க இலக்கியங்கள் தொடங்கி இக்கால இலக்கியங்கள் வரை அவ்வவ் காலச் சமூகச் சூழலுக்கு மட்டுமல்லாமல் எதிர்காலச் சந்ததியினரும் உய்விக்கும்வகையில்